2020 ஜனவரி 9]

திருமதி ம. கீதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் ஒன்றியத்தில், தரங்கம்பட்டி ஊராட்சி பகுதியில் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள்* Marketing committee-*யின்* DPC *மூலமாக நெல் கொள்முதல் செய்து கொண்டிருக்கின்றோம். நேரடி நெல் கொள்முதல் நிலையம்*-DPC *என்பது உணவுத் துறையின் மூலமாகச் செயல்படுகிறது. ஆகவே, முறையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் நானும் தெரிவித்து, நீங்களும் தெரிவித்து, அதைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை

***53923—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, செட்டிப்பாளையம் கிராமப் பகுதியில் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை கட்டும் பணிகளைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–50

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, செட்டிப்பாளையம் கிராமத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

செயல்பட கட்டடம் கட்டும் பணி மத்திய பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மருத்துவமனை/ மருந்தகம் கட்டடம் அனைத்தும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் பெயரிலேயே பதிவு செய்யப்படுகிறது. கட்டடம் கட்டும் செலவினம் முழுவதும் மேற்படி கழகத்தையே சாரும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமே புதிய கட்டடங்களைக் கட்டுகிறது. மாநில அரசின் வேலை, மருத்துவ சேவை அளிப்பது மட்டுமே. இருப்பினும், மேற்படி கட்டடம் கட்டும் பணியினைத் துரிதப்படுத்த தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு வலியுறுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமல் மக்கள் மனதிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்தி, தமிழகம் பல்வேறு துறைகளில் முதன்மை இடத்தைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நனவாக்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். தமிழகம் 'சிறந்த செயல்திறன் மிக்க மாநிலமாக' உருவாவதற்கு மாண்புமிகு முதல்வருக்கு உறுதுணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய இனிய பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவால், கடந்த 2015 ஆம் ஆண்டு திருப்பூர் மாவட்டத் தொழிலாளர்களின் நலனுக்காக, கிட்டத்தட்ட 140 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ESI மருத்துவமனைகட்டுவதற்காக7ஏக்கர்50சென்ட்நிலம்வழங்கப்பட்டது. மேற்படி நிலத்தில் புதிய மருத்துவமனையைக் கட்ட சில ஆண்டுகளுக்கு முன்புதான் அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த இடத்தில் ESI மருத்துவமனையை அமைப்பதற்கு, அந்த இடத்தை

2020 ஜனவரி 9]

possession *எடுத்து,* compound wall*-ம் அமைக்கப்பட்டுவிட்டது. மேலும், திருப்பூர் மாநகராட்சியிலே, திருப்பூர் மாவட்டத்திற்கு பல்வேறு மாநிலங்களிலிருந்து 10 இலட்சம் தொழிலாளர்கள் வரை வருகின்றார்கள். அந்தத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக, அந்த இடத்திலே* ESI *மருத்துவமனை கட்டுவதற்கு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் 100 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை துவங்குவதற்கு செட்டிப்பாளையம் கிராமத்தில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான நிலம் தேர்வு செய்யப்பட்டு, 10–2–2019 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட மருத்துவமனைக்கு கட்டடம் கட்டும் பணி மத்திய பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அம்மருத்துவமனைக்கு கட்டடம் கட்ட மண் பரிசோதனை செய்யவும் மற்றும் அஸ்திவாரம் போடவும் ரூபாய் 2 இலட்சத்து 39 ஆயிரத்திற்கான முதல்நிலை மதிப்பீடு கோயம்புத்தூரிலுள்ள மத்திய பொதுப் பணித் துறையால் தயார் செய்யப்பட்டு, மத்திய அரசின் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மருத்துவமனை/மருந்தகம் கட்டடம் அனைத்தும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் பெயரிலேயே பதிவு செய்வதாலும், கட்டடம் கட்டும் செலவினம் முழுவதையும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம்தான் வழங்க வேண்டும். மேற்கண்ட மருத்துவமனைக்கு கட்டடம் கட்டும் பணியினை துரிதப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தை வலியுறுத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

[2020 ஜனவரி 9

முற்பகல் 10–55

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், திருப்பூர் மாவட்டம் என்பது மாநிலத்திலேயே கிட்டத்தட்ட 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய செலாவணியை ஈட்டுகின்ற மாவட்டமாகும். இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வசிக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களின் நலன்களைக் கருதி மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதற்கு என் சார்பாகவும், பொது மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை பணியாளர் குடியிருப்பு இருக்கிறது. அந்தக் குடியிருப்பு ஏறத்தாழ 25 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் கட்டப்பட்டது. அந்தக் குடியிருப்பின் ‘A’ block*–ல் 8 கட்டடங்களும்,* ‘B’ block*–ல் 4 கட்டடங்களும் என மொத்தம் ஒவ்வொரு கட்டடத்திலும் 16 வீடுகள் வீதம் 192 வீடுகள் அங்கே இருக்கின்றன. அந்தக் குடியிருப்புப் பகுதியில் அடிக்கடி கழிவுநீர் பிரச்சினை ஏற்பட்டு, அங்கே வசிக்கின்ற மக்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகி வருகின்றார்கள். மேலும், 25 ஆண்டு காலத்திற்கு முன்னால் கட்டப்பட்ட கட்டடம் என்பதால், அங்குள்ள வீடுகளின் மேற்கூரைகள் அடிக்கடி இடிந்து விழுகின்றன. அதேபோல, பால்கனிகளும் இடிந்து விழுகின்றன. இது மத்திய அரசாங்கத்தின் தொடர்புடைய பணிகள் என்று சொன்னாலும்கூட, அந்தக் குடியிருப்பில் வசிக்கின்ற பணியாளர்களின் நலன் கருதி, மாநில அரசாங்கம், மத்திய அரசு அதிகாரிகளை வலியுறுத்தி, அந்தக் கட்டடத்தை இடித்து விட்டு புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு முயற்சி மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடம் சரியில்லை என்று கூறியிருக்கின்றார். அதில் ஏதாவது பிரச்சினை இருந்தால், துறையின் சார்பாக அதை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, சரி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

பேருந்து வசதி

***50862—திரு. க.சு. சரவணக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்திலிருந்து சென்னைக்கு குளிர்சாதன வசதியுடன்கூடிய புதிய விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக தடம் எண் 160 A/C *சென்னையிலிருந்து பெரியகுளம் வழியாக தேனிக்கு தலா ஒரு பேருந்து வீதம் இரண்டு பேருந்துகள் இருமுனைகளிலிருந்தும் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், தடம் எண் 163* ASS *படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனப் பேருந்து, சென்னையிலிருந்து பெரியகுளம் மற்றும் தேனி வழியாக போடிக்கு தலா ஒருபேருந்துவீதம்இரண்டுபேருந்துகள்இருமுனைகளிலிருந்தும் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், மேற்படி பேருந்துகளுக்கு இணையதளம் மூலமாக முன்பதிவு செய்து பயணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, பெரியகுளம் பயணிகள் மேற்கூறிய*